**(சுருக்கம்)**

துப்புரவுப் பணியாளர்கள்——அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள்— தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயித்தல்—ஆணை ——வெளியிடப்படுகிறது.

---

**நிதி (ஊதியப்பிரிவு)த் துறை**

**அ.ஆ. நிலை எண் : 385** **நாள்: 01—10—2010.**

புரட்டாசி, 15.
திருவள்ளுவர் ஆண்டு, 2041.

**படிக்கவும் :**

அ.ஆ. நிலை எண்: 234, நிதி (ஊதியப்பிரிவு)த்துறை, நாள்: 01—6—2009.

– – – – –

**ஆணை :**

2010, செப்டம்பர் திங்கள், 15—ஆம் நாளன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலக திறப்பு விழாவில் துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதார நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பினைத் தொடர்ந்து அரசு அலுவலகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணி முடித்த துப்புரவுப் பணியாளர்களுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ரூ.1300—3000 + ரூ.300/— தர ஊதியம் கொண்ட சிறப்புக் காலமுறை ஊதியம் (Special Time Scale of Pay) நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது. மேலும், இவர்களுக்கு அரசு அலுவலர்கள் தற்போது பெற்றுவரும் அகவிலைப்படியுடன் சேர்த்து அரசு அலுவலர்களுக்கு அவ்வப்போது வழங்கப்படும் அகவிலைபடி உயர்வும் ஆண்டுதோறும் அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் மூன்று சதவிகிதம் ஆண்டு ஊதிய உயர்வும் சேர்த்து வழங்க இதன்மூலம் அரசு ஆணையிடுகிறது :—

அ) துப்புரவு பணியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் அரசு அலுவலகத்திலோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளிலோ குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும்;

ஆ) சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள் தங்களது துறையின் கீழ் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் பெயர்கள் / எண்ணிக்கை மற்றும் பணிபுரிந்த காலம் குறித்த பணிப்பட்டியலை சரிபார்த்து தக்க சான்றிடுதல் வேண்டும்.

2) தினக்கூலி / தொகுப்பூதியம் அடிப்படையில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கையின்படி அவ்வகைப்பணியிடங்கள் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியிடங்களாக ஒப்பளிப்பு செய்வதற்கு உரிய கருத்துரு அரசுக்கு (நிருவாகத் துறைக்கு) அனுப்பிவைக்க வேண்டுமெனவும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

/த.பி.பா/

3) இவ்வாணை செப்டம்பர் திங்கள், 15–ஆம் நாள் முதல் நடைமுறைப் படுத்தப்படும்.

4) மேலே பத்தி—1–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட சிறப்பு காலமுறை ஊதியத்திற்கான செலவினம் சம்மந்தப்பட்ட துறைகளின் கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பு உட்தலைப்பின் கீழ்வரும் "01. சம்பளங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

5) இச்செலவினத்திற்கு தேவையான கூடுதல் நிதி 2010—2011–ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இதற்குரிய செயற்குறிப்பினை அந்தந்த துறைத் தலைவர்கள் 2010—2011–ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்க பிரேரணையில் சேர்த்து நிதித்துறைக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6) அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கான ஆணை நிதி (பொது மாநில கழகம்) பிரிவில் தனியே வெளியிடப்படும்.

7) இவ்வாணை கூடுதல் நிதி ஒதுக்கப்பேரேடு எண்: 1065 ( ஆயிரத்து அறுபத்து ஐந்து) உடன் வெளியிடப்படுகிறது.

**/ஆளுநரின் ஆணைப்படி /**

**க. சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை–9.
செயலாளர், சட்டமன்றப் பேரவை, தலைமைச் செயலகம், சென்னை–9.
ஆளுநரின் செயலாளர், சென்னை–32.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை–32.
தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், (அ.ந.மு / பட்டிகள்) , சென்னை – 9.
அனைத்துத் துறைத் தலைவர்கள்/ மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள்
/ முதன்மை நீதித்துறை மாஜிஸ்திரேட்டுகள்.
மாநில கணக்குத் துறைத் தலைவர், கணக்குகள் (ம) உரிமைத் தொகை, சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை –II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAG), சென்னை–9 / மதுரை.
பதிவாளர்; உயர்நீதிமன்றம், சென்னை–104.
தலைவர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை–2.
தமிழ் நாட்டின் அனைத்து பல்கலைக்கழகங்களின் பதிவாளர்.
கருவூலங்கள் மற்றும் கணக்குகள் இயக்குநர், சென்னை–15.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை–6.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை–108.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை–6.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், தலைமைச் செயலகம், சென்னை–9.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், (வடக்கு/ தெற்கு / கிழக்கு ) சென்னை – 1 /35/5.
சம்பளம் மற்றும் கணக்குகள் அலுவலர், மதுரை – 625 001.

....... / 3 /

அனைத்து கருவூல அலுவலர்கள் / அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / தூத்துக்குடி / வேலூார் / திருப்பூர் / ஈரோடு.
அனைத்து கோட்ட வளர்ச்சி அதிகாரிகள் / கோட்டாட்சியர்கள் / வட்டாட்சியர்கள் / வட்டார வளர்ச்சி அதிகாரிகள் / நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அதிகாரிகள் / ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள்.

**<u>நகல் பெறுவோர்:-</u>**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் செயலாளர், சென்னை – 9.
மா /ண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், நிதித்துறை, சென்னை – 9.
நிதி ( வ.செ. பொது/2) / (ந.நி.(ம)கு.வ) / (ஊ.வ.(ம)ப.ரா)த் துறை, சென்னை – 9.
இருப்புக்கோப்பு / உதிரி நகல்.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

1/10/10
பிரிவு அலுவலர்.